# தேசழமைச் சட்டக்கோவையினால் அறியப்படும் பெண்களது உரிமைகளும் நடைமுறைகளும் – ஓர் ஆய்வு

**சிவறஞ்சினி, இ., கிருஷ்ணராஜா, செ**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rasathuraisivaranjini@gamil.com

*தென்னாசியாவில் நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையானது ஏறக்குறைய 450 வருட கால அந்நியராட்சிக்கு உட்படுத்தப்பட்டு மேலைத்தேய முலாமிடப்பட்ட நாடாகும். இதனால் இலங்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டன. அவ்வகையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்ட தேசவழமைச் சட்டம் முதன்மையானதாகும். இலங்கையில் வாழும் மக்கள் பல்வகைச் சட்டங்களால் ஆளப்பட்டு வருகின்ற போதும் வடமாகாணத் தமிழர்கள் அறிந் திருக்க வேண்டிய விசேட சட்டங்களில் ஒன்றாகச் தேசவழமைச் சட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாண இராசதானி காலத்தில் நிலவிய வழமைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்ததை அவதானித்த போர்த்துக்கேயர் அவற்றை ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தனர். ஒல்லாந்தர் காலத்தில் தேசவழமை டச்சு மொழியில் கோவைப்படுத்தப்பட்டு தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் பின்பற்றப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. தேசவழமைச் சட்டத்தில் வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் முதுசம், சொத்துரிமை, சீதனம், தத்தெடுக்கும் சட்டங்கள், அடிமைச் சட்டங்கள், விவாகரத்து போன்றன சம்பந்தமான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கியமாகப் பெண் உடைமைகள், உரிமைகள் பற்றியும் விபரமாக வரையறை செய்கின்றது. தேசவழமைச் சட்டத்தில் குறிப்பிடப்படும் பெண்களது உரிமைகளையும் நடைமுறைகளை யும் முன்வைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வுக்கு முதலாம்நிலைத் தரவுகளாக தேசவழமைச் சட்டக் கோவையினுடைய மூலப்பிரதி, தேசவழமைச் சட்டம் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் அறிக்கைகள், நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் ஆகியனவும் இரண்டாம்நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் அரசாங்க வெளியீடுகள் இணையத்தளக் கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. இது வரலாற்று அணுகுமுறையில் அமைந்த விபரண ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது. தேசவழமைச் சட்டமானது வடஇலங்கைத் தமிழ் மக்களின் முக்கிய அங்கமாக விளங்குவதுடன் பெண்களுக்கான உரிமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. இச்சட்டம் பெண்களை இழிவுபடுத்துவதாகப் பலராலும் விமர்சிக்கப்படு கின்ற போதிலும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் நடைமுறை யிலுள்ளது என்பதனை இவ் ஆய்வின் ஊடாக அறிய முடிகின்றது.*

**திறவுச்சொற்கள்:** தேசவழமை,சட்டம், பெண், சொத்து, உரிமை